பத்திரிக்கைச்செய்தி

கட்டுமான பணிகளுக்காக மணல் கொண்டு சென்ற லாரி உரிமையாளரிடம் லஞ்சம் கேட்டு பெற்ற தலைமைக்காவலருக்கு 3 வருடங்கள் கடுங்காவல் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.மோகன் என்பவர் ஆட்டுபுத்தூர் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் சொந்தமாக 3 லாரிகள் வைத்து உள்ளார். புகார்தாரர் மணல்குவாரியிலிருந்து மணல் எடுத்து கட்டுமான பணிகளுக்காக சென்னையில் விற்று வந்துள்ளார். புகார்தாரரின் லாரிகள் சென்னை பெங்களுரு தேசிய நெடுஞ்சாலையில் செல்லும்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் திரு.முனுசாமி, சிறப்பு சார்பு ஆய்வாளர், ஒவ்வொரு லாரிக்கும் மாதம் ரூ.1,000/- வீதம் ரூ.3,000/- தனக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரார் சென்னை நகரப்பிரிவில் புகார் அளித்துள்ளார். மேற்படி புகார் அடிப்படையில் கடந்த 12.02.2010ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.முனுசாமி. சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் திரு.மதியழகன். தலைமைக்காவலர் 1210, புகார்தாரரிடமிருந்து லஞ்சபணம் ரூ.3,000/-பெற்ற போது இருவரும் கைது செய்யப்பட்டனர். பின் வழக்கில் புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு காஞ்சிபுரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை செய்யப்பட்டது. மேற்படி வழக்கு விசாரணையின்போது திரு.முனுசாமி, சிறப்பு சார்பு ஆய்வாளர் இறந்துவிட்டார். இவ்வழக்கில் இன்று 14.05.2025 திரு.மதியழகன், தலைமைக்காவலருக்கு 3 வருடங்கள் கடுங்காவல் தண்டணையும் மற்றும் அபராதம் ரூ.20,000/- விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.